செய்தி வெளியீடு

செ.வெ.எண்:175 — நாள்: 23-02-2010

பொருள் த.நா.மீ.வ.கழகம் – 11–2–2010 முதல் 16–2–2010 வரை கொச்சியில் நடைபெற்ற ஐந்தாவது அகில உலக வண்ண மீன் கண்காட்சியகத்தில் கலந்து கொண்டு தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பெற்ற பரிசு விவரங்கள் – தொடர்பாக.

---

அகில உலக ஐந்தாவது வண்ண மீன் கண்காட்சி – 2010 கேரளா மீன் துறை மற்றும் மத்திய அரசின் விவசாய அமைச்சகத்தின் பங்களிப்புடன் கேரள மாநிலம் கொச்சியில் ஜவகர்லால் நேரு அரங்கில் பிப்ரவரி –2010–ல் 12 முதல் 16ஆம் தேதி வரை பிரம்மாண்ட அளவில் நடத்தப்பட்டது., இவ்வகில உலக வண்ண மீன் கண்காட்சியில் இந்தியாவில் உள்ள பத்து மாநிலங்களும் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, இலங்கை மற்றும் லட்சத்தீவு போன்ற நாடுகளில் இருந்தும் ஐந்தாவது அகில உலக வண்ண மீன் கண்காட்சியில் கலந்து கொண்டார்கள்.

தமிழகத்திலிருந்து மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி அவர்களுடைய ஆணையின்படி தமிழக அரசு செயலாளர் மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு அவர்களின் அறிவுரைப்படியும் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்களின் வழிநடத்துதலின் மூலம் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக ஆழியார் மற்றும் மண்டபம் அலகு மேலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய குழு கலந்துக் கொண்டு தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சார்பில் 10 நன்னீர் வகை வண்ண மீன்கள் மற்றும் 20 கடல் வண்ண மீன்கள் கொண்ட வண்ண மீன் கண்காட்சித் தொட்டிகள் அமைக்கப்பட்டது. இக்கண்காட்சியை சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் பார்த்து ரசித்தனர்.

இக்கண்காட்சியில் இந்திய மாநிலங்கள் மற்றும் அண்டை நாடுகள், மத்திய, மாநில மீன்வள துறைகள் , மீன் வள கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள் என 70–க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு போட்டியில் கலந்துக் கொண்டனர். 300–க்கும் மேற்பட்ட நன்னீர் இன வண்ண மீன்களும் 150–க்கும் மேற்பட்ட கடல்வாழ் இன வண்ண மீன்களும் கண்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இப்போட்டியில் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு கீழ்கண்ட மூன்று முதல் பரிசுகள் கிடைக்கப் பெற்றன.

1. மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்பில் – அரங்குகளிலே மிக சிறந்த அரங்குக்கான முதல் பரிசு தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

2. நன்னீர் இன வண்ண மீன்களுக்கான முதல் பரிசு நியான் டெட்ரா என்ற இனத்திற்கு கிடைக்கப் பெற்றது.

3. கடல்வாழ் இன வண்ண மீன்களுக்கான முதல் பரிசு கடல் தேவதை என்ற இனத்திற்காக தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைக்கப் பெற்றது.

இந்த பரிசுகளை 16/2/2010 அன்று மாலை கொச்சியில் நடைபெற்ற நிறைவு விழாவில் கேரளா உள்துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை அமைச்சர் திரு. கொடியேறி பாலகிருஷ்ணன் அவர்களிடம் இருந்து பெறப்பட்டது. இவ்விருதுகளை அமைச்சர் கே.பி.பி.சாமி அவர்களிடம் பாராட்டு பெற்றுக் கொண்டனர். உடன் கால்நடை பராமரிப்பு, பால் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் C. முத்துவேலாயுதம், IAS. மீன்வளத்துறை ஆணையாளர் A. சுகுமாறன் IAS. உடனிருந்தனர்.

23/2/2010

(மி. மோகனசுந்தரம்)
பொது மேலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9